# மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலைக் கீதம்

வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!
வாழ்க! எங்கள் தமிழ்மொழி

மேற்கு இலண்டன் தமிழ்க் கழகம்
மேலும் மேலும் வளர்ந்துமே
நாற்றிசையும் தமிழ் பரப்ப
நாமும் தமிழைக் கற்போமே - வாழ்க!

ஒழுக்கமோடு விழுப்பமிக்க
உயர் குணங்கள் வளர்ந்திட
தொழுது நாமும் தொன்மையான
தூய தமிழைக் கற்போமே - வாழ்க!

சேரன் சோழன் பாண்டியன்
சேர்ந்து வளர்த்த தமிழினை
பாரில் பரப்பப் பாலர் நாமும்
பயில்வோம் வாரீர் தமிழினை -வாழ்க!

அன்னை மொழி தமிழினை
ஆர்வமோடு கற்று நாம்
இன்பம் எய்தி என்றும் வாழ்வோம்
எம் கழகம் வாழ்கவே! - வாழ்க!